பெற்றோர்களே, உங்கள் மொழிகள் ஒரு நல்வாய்ப்பு

தெரியுமா உங்களுக்கு?

7000 மொழிகள்
• உலகம் முழுவதும் •

600 மொழிகள்
• பிரான்சில் •

60 % மக்கள்
பல மொழிகளில் பேசுகின்றார்கள்

4 குழந்தைளில் 1
பல மொழிகளுடன் வளருகின்றது*

இரு மொழிக்கொள்கை
எல்லா மொழிகளிலும் நன்மையே!

என் குழந்தை பல மொழிகளுடன் வளருகிறது, இது ஒரு பிரச்சினையா?

ஒரு பிரச்சினையும் இல்லை!

- ஒரு குழந்தை எளிதாக குழப்பம் இல்லாமல், பல மொழிகளை கற்றுக்கொள்ள முடியும் என்பது நிரூபிக்கப்பட்டுள்ளது.
- ஒரே நேரத்தில் இரண்டு, ஒன்றன்பின் ஒன்றாக, மூன்று அல்லது அதற்குமேல்... எல்லாமே சாத்தியம்!
- எல்லாப் பிள்ளைகளையும் போலவே, அவர்களது போக்கிலேயே விட்டு மொழியை வளர்த்துக்கொள்ள வழி செய்ய வேண்டும்.

என் குழந்தைக்கு என் மொழி பயனுள்ளதா?

நிச்சயமாக!

- பெற்றோரின் மொழிகளும் குழந்தைகளுக்கு அடிப்படையானவை. அவர்களை ஆற்றுப்படுத்தி அவர்களது குடும்ப வரலாற்றை மற்றும் பண்பாட்டடை வரும் தலைமுறைகளுக்கு எடுத்துச் செல்லுகிறது.
- குழந்தை பேச கற்றுக்கொள்வதும் கூட இந்த மொழிகளால் தான்.
- மேலும், ஒரு குழந்தைக்கு தன் தாய்மொழி/மொழிகள் தெரிந்து இருந்தால், பின்னர் பிரெஞ்சு மொழியை கற்றுக்கொள்வது எளிதாகும்!

அவ்வாறெனில், பள்ளியில் என்ன நடக்கும்?

கவலை வேண்டாம்!

- முக்கியமானது என்னவென்றால், உங்கள் பிள்ளை தன்னுடைய எல்லா மொழிகளையும் மனப்பூர்வமாக வரவேற்கலாம் என்று உணருவார்.
- உங்கள் மொழியில் அவருடன் பேசுவதை தொடருங்கள், பள்ளியின் மொழியின் மேலும் இவர் அறிந்து கொள்கின்ற இந்த புது உலகத்தின் மேலும் உங்கள் ஆர்வத்தை காட்டுங்கள்.
- ஒரு முறை நம்பிக்கையடைந்து விட்டால், அவர் எளிதாக பிரஞ்சை கற்றுக்கொள்வார்... பின்பு இரு மொழியர் அல்லது பன்மொழியாளராய் மாறுவார்!

நிரூபிக்கப்பட்டுள்ளது

இரு மொழியராக இருப்பது :

- ஒரு பன்முகக்கலாச்சார உலகில் மிக எளிதாக தொடர்பு கொள்ளமுடியும்
- கலாச்சார மற்றும் மொழி வேறுபாட்டை ஏற்றுக்கொள்ளவும் மற்றும் மதிக்கவும் முடியும்
- மற்றவர்களின் உணர்ச்சியை உணரவும், கேட்டு புரிந்து கொள்ளவும் முடியும்
- படைக்கும் திறனுள்ளவராக இருக்க முடியும்
- பல்வேறு சூழ்நிலைகளுக்கு முன் அனுசரித்து நடக்கமுடியும்

மற்ற மொழிகளைய எளிதாகக் கற்றுக்கொள்ள முடியும்

ஆனால் குழந்தையின் எல்லா மொழிகளும் வீட்டிலும் சமுதாயத்திலும் மதிக்கப்பட வேண்டும்!

நாள்தோறும்

• குடும்பத்தோடு •

கதை சொல்லி, பாடி, படித்து, விளையாடி...
நீங்கள் விரும்பும் மொழியில்
பேசி, சந்தித்து ...
உங்கள் மொழியைப் பேசும் மற்றவர்களுடன்

• கல்வி அமைப்புகளில் •

(குழந்தைவளர்ப்பகம், பள்ளிக்கூடங்கள், சமூகமையங்கள், ...)

கருத்துக்கள் பரிமாறி
விட்டில் பேசும் மொழிகள் மற்றும் அமைப்பின் மொழிகளில்
பகிர்ந்து கொண்டு
வார்த்தைகளை, கதைகளை, பாடல்களை உங்கள் மொழிகளில்

• bahasa • LANGUAGE • 언어 • LANG • 語言 • du la la • لغة • FITENY • dil • idioma • LANGUE •

d'une langue à l'autre

www.dulala.fr

*பாதைகள் மற்றும் பூர்வீகங்கள் ஆய்வு INED-INSEE 2008